<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>

<u>அசல் வழக்கு எண்.42/2020</u>

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கலீல் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 26.09.2022.

**P.W. : 1**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என் தந்தையார் இறந்து போன போது எவ்வளவு வயது என்றால் 86 வயதிற்கு மேல் இருக்கும். என் தாயார் பெயர் சுதயா பேகம். அவர் 1997ல் ஆகஸ்ட் மாதத்தில் இறந்துவிட்டார். என் தாயார் இறப்பதற்கு முன்பு 20 நாட்கள் துபாயில் இருந்து வந்தேன். அவர் இறந்த பின்பு 20 நாட்கள் துபாயில் இருந்து வந்தேன். என் தாயார் திருச்சியில் வழக்கு சொத்தில் தான் இறந்தார். என் சகோதரி ஸைபா பர்வீன் என்றால் சரிதான். என் சகோதரிக்கு 1976ல் திருமணம் நடந்தது. என் சகோதரி ஸைபா பர்வீன் என்னுடைய பாதுகாப்பில் தான் இருந்து வருகிறார். நான் அந்த வீட்டின் முதல் மாடியில் இருந்து வருகிறேன். என் சகோதரிக்கு 2 மகள்கள் 1 மகன் உள்ளார். என் சகோதரிக்கு சொந்தமாக சென்னையில் வீடு இருக்கிறது. அதை தற்போது விற்பதற்கு தயார் செய்து வருகிறார்.

என்னுடைய ஸைபா பர்வீன் வீடு அடையாறு காந்திநகர் உள்ளது என்றால் சாந்தோமில் உள்ளது. அது தனி வீடு அல்ல. அப்பார்ட்மெண்டில் உள்ளது. சென்னை அடையாறு 4 வது மெயின் ரோட்டில் ஒரு அடுக்கு மாடி குடியிருப்பில் எனது தந்தையார் ஒரு வீடு வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரியின் கணவர் தான் வாங்கி கொடுத்தார். 1977 ல் அவரது கணவரோடு எனது சகோதரி துபாய் சென்றுவிட்டார். எனக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர். என் குடும்பத்தார் என்னுடன் துபாயில் வசித்தார்களா என்றால் என்னுடன் வசிக்கவில்லை. ஜே.கே. நகர் முகவரியில் உள்ள வீட்டின் அடிமனையை எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் 2000 ம் ஆண்டு நான் கிரையம் வாங்கி வீடு கட்டியுள்ளேன். என் சகோதரி எங்கள் தந்தையார் உயிருடன் இருக்கும்போதே ஏற்கனவே அடையாறில் வாங்கப்பட்ட வீட்டை விற்றுவிட்டு என் தந்தையிடம் கூடுதலாக பணம் பெற்று சாந்தோமில் வீடு வாங்கினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தங்கை ஸைபா பர்வீன் பெயர் தெரியும். அவரின் கையெழுத்து தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து ஸைபா சாகிப் கையெழுத்து தான் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சாட்சியாக என் தாயார் சூரையா பேகம் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த கையெழுத்துக்கள் முறையே பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆகும். என்னிடம் காட்டிய பொதுபாக விடுதலை பத்திரம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எனது அப்பா எனது சகோதரிக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை எழுதும்போது நான் இந்தியாவிலேயே இல்லை. மேற்படி பத்திரத்தில் தங்களுக்கு சொந்தமான ஸதாவர ஜங்கம சொத்துக்களில் எனக்குள்ள உரிமையை

விட்டுக் கொடுப்பதற்காக எனக்கு சென்னை அடையாறு காந்தி நகர், 4 வது மெயின் ரோட்டில் ஒரு பிளாட் (3.12 லட்சம்) தங்களுடைய சொந்த பணத்தில் வாங்கி கொடுத்துவிட்டீர்கள் எனவே நாளது தேதிவரை தங்களுக்கு சொந்தமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் எனக்குள்ள பாத்தியத்தை விடுதலை செய்து கொடுத்துவிட்டேன் என்று அந்த ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சகோதரியின் பாகத்தை தான் அவர் எனக்கு 10.12.2018 ல் அன்று எனக்கு என் சகோதரி பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டார் என்று நான் என்னுடைய வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.4 ஆவணத்தை அந்த ஆவணம் குறிப்பிடப்பட்ட தேதியில் என் பெயருக்கு எழுதிக் கொடுப்பதற்கு என்னுடைய சகோதரி ஸ்பை ஸகிர் என்கிற பர்வீனுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் அவருக்கு பண தேவை இருப்பதால் நான் பணம் கொடுத்ததன்பேரில் அவர் எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார். 03.09.1988 க்கு பிறகு வழக்கு சொத்தில் எனது சகோதரிக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் எங்கள் குடும்பத்தின் மூத்த ஆண்மகன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை நானும் எனது சகோதரர் மற்றும் சகோதரியுடன் சுமூகமாகத்தான் இருந்தோம். அவ்வாறு இருக்கும்போது அந்த வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு சென்று வருவேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் தான் வீட்டில் இருந்த ஆவணத்தை எடுத்து சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ள அசல் ஆவணத்தில் உள்ள சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பங்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். அவருக்கு நான் பங்கு இல்லை என்று

சொல்லவில்லை. அவர் என் பங்கையும் சேர்த்து தான் அனுபவித்து வருகிறார். ஆனால் என் பங்கை மட்டும் தான் கேட்கிறேன். என் அப்பா நான் மூத்தமகன் என்பதால் என்னை மூத்தவள்ளியாக நியமித்துவிட்டார். 2016 ஆண்டு நான் எங்கிருந்தேன் என்றால் ஆகஸ்ட்டில் என் அப்பா இறந்தார். செப்டம்பரில் நான் வந்துவிட்டேன்.